<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

OS.No: 116/2023 நாள் 13.02.2026.

வாசா.2, திரு.ராஜேந்திரன்

வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 4 முதல் 11 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் மனைவியுடன் பிறந்தவர் ஒரே நபர். 1ம் வாதி தங்கராஜ் என் மாமனார். நானும், என் மாமனாரும் ஒரே கூட்டு குடும்பமாக தான் உள்ளோமா என்றால் அப்படியில்லை தனிததனி குடும்பமாக தான் வசித்து வருகிறோம். எனக்கும் 1ம் வாதியான என் மாமனாருக்கும் இடையில் சுமுகமான உறவு உள்ளது சண்டை சச்சரவு எதுவும் இல்லை. இன்று நீதிமன்றத்திற்கு என்னுடன் என் மாமனார் வந்துள்ளார். இந்நீதிமன்றத்தில் என் மாமனார் ஆஜராகி என்ன வகையில் சாட்சியம் அளித்திருந்தார் என்று நான் என் மாமனாரிடமும், என்னுடைய வழக்கறிஞரிடமும் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள விபரங்களை எனக்கு தெரியுமா என்று கேட்டால் தெரியும். நான் வருமான வரியை செலுத்தி வருகிறேனா என்று கேட்டால் இல்லை. சித்திரபுத்திரன் என்பவர் பல நபர்களிடமிருந்து கடன் வாங்கியதாக நான் சொல்லும் போது அவர் கடன் வாங்க போகும் போதுஎல்லாம் நான் உடன் சென்றேனா என்று கேட்டால் இல்லை. எனவே சித்திரபுத்திரன் யாரிடமிருந்து கடன் வாங்கியுள்ளார் என்று எனக்கு நேரடியாக தெரியாது. சித்திரபுத்திரனுக்கு கடன் கொடுத்தவர்கள் யாருமே இந்த மாதிரி வழக்கு போடவேண்டும் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வாசாஆ.2 புரோ நோட்டை யார் எழுதியது என்று சொல்லி அதில் எழுதியவரின் பெயரோ கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். சித்திரபுத்திரன் என்பவர் 4 முதல் 11 எதிர்வாதிகளிடமிருந்து பெற்ற கடன் தொகை முழுவதையும் செலுத்தாமல்இருந்து கொள்ள வேண்டி நானும் என் மாமனாரும் வாசாஆ.1, 2 புரோ நோட்டுக்களை உற்பத்தி செய்துகொண்டோம் என்று சொன்னால் அது சரியல்ல. கடன் கொடுத்த நபர்களுக்கு சொத்தை விற்று ஈவு படி தொகையை கொடுத்துவிடலாம் என்று சித்திரபுத்திரனின் வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னிடத்தில் சொன்னார்களா என்று கேட்டால் இல்லை . சித்திரபுத்திரினிடம் இருந்து கடன் வாங்கிய அனைத்து நபர்களையும்

இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நானும் என் மாமனாரும் 1 முதல் 3 எதிர்வாதிகளும் வஞ்சககூட்டு சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் எனவே வழக்கில் கோரிய பரிகாரம் எங்களுக்கு கிடைக்க கூடியதல்ல என்றால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 13th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.